Bhagavan Sri Sathya Sai
85th Birthday Celebrations

தினமலர்

14-4-2010

# அன்பின் ஒளி



ஒரே மதம் —
அதுவே அன்பு
ஒரே மொழி —
இதயத்தின் மொழி
ஒரே ஜாதி —
மனித ஜாதி
ஒரே சட்டம்—கர்ம
வினை சட்டம்
ஒரே தெய்வம்—
எங்கும் வியாபித்
திருப்பவரே அவர்

எந்த ஒரு நம்பிக்கையையும் குலைக்கவோ அல்லது சீர்திருத்தவோ நான் வரவில்லை. ஆனால், ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் அவரது மத நம்பிக்கையை நிரூபிக்கவே வந்துள்ளேன். இதனால் ஒரு கிறிஸ்தவர் சிறந்த கிறிஸ்தவராகவும், ஒரு முஸ்லிம் சிறந்த முஸ்லிமாகவும், ஒரு இந்து சிறந்த இந்துவாகவும் இயலும்.

கல்வியின் முடிவே
நன்னடத்தை
அறிள் முடிவே அன்பு
கலாசாரத்தின் முடிவு
பூரணத்துவம்
ஞானத்தின் முடிவு
மோட்சம் (விடுதலை)


கோட்பாடுகளற்ற அரசியலும், நன்னடத்தையற்ற கல்வியறிவும், மனிதாபிமானமற்ற விஞ்ஞானமும், நாணயமற்ற பொருளாதாரமும், பிரயோஜனமற்றது மட்டுமல்ல, அவை ஆபத்தானவையும் கூட

வாழ்க்கை ஒரு சவால்;
அதை எதிர்கொள்.
வாழ்க்கை ஒரு கனவு;
அதை உணர்ந்து
கொள்.
வாழ்க்கை ஒரு
விளையாட்டு; அதை
மகிழ்ச்சியுடன்
விளையாடு.
வாழ்க்கை அன்பு
மயமானது;
அதை அனுபவி

மொழி, மதம், இனம், தேசம் போன்ற குறுகிய எண்ணங்களுக்கு மனதில் இடம் கொடுக்காதீர்கள். நாம் அனைவரும் இரைவனது குழந்தைகள் என்று உயர்ந்த மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பியபடி, இறைவனை எந்த உருவத்திலும் வணங்கலாம், ஆனால், இறைவன் ஒருவனே என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். அன்பைப் பெருக்கி, ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாடும் இறைவனது மாபெரும் மாளிகையின் ஒரு அறைதான்.

## 'மனிதனுக்கு செய்யும் சேவை; கடவுளுக்கு செய்யும் தொண்டு'

### பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் செய்தி இது



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில், 1926ம் ஆண்டு, நவம்பர் 23ம் தேதி பிறந்தவர் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா. இவரது இயற்பெயர் சத்ய நாராயண ராஜு. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், வெளியில் தெரியாத ஒரு கிராமமாக இருந்தது புட்டபர்த்தி.

ஆனால், தற்போது இக்கிராமத்தில் அமைந்துள்ள சத்ய சாய்பாபாவின் 'பிரசாந்தி நிலையம்' ஆசிரமத்தால், புட்டபர்த்தி என்ற பெயர் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

பல்வேறு நாடுகள், மாநிலங்கள், இனம், மதம், கலாசாரம் ஆகியவற்றை சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள் மற்றும் பெண்கள், தினந்தோறும் இந்த ஆசிரமத்திற்கு வந்து செல்கின்றனர்.




கடந்த 70 ஆண்டு காலத்தில், பல லட்சக்கணக்கான பக்தர்கள், ஆசிரமத்தின் தங்கும் விடுதி அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். இவர்கள் 185 நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்தவர்கள்.

இந்த ஆசிரமத்திற்கு செல்லும் வழியில், பல்கலைக்கழகம், பள்ளிகள், கல்லூரிகள், இரண்டு பெரிய மருத்துவமனைகள், கோளரங்கம், விமான நிலையம் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவை அமைந்துள்ளன.

அமைதியான சூழ்நிலையில் அமைந்திருக்கும்

தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...



ஜனாதிபதி பிரதிபா பாட்டீலும், அவரது குடும்பத்தினரும் மே மாதம் 2009ல் பிரசாந்தி நிலையத்தில் பகவான் பாபாவிடம் ஆசி பெற்றனர்.




கடந்த 1995ல் நடைபெற்ற ஸ்ரீ சத்ய சாய் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் மன்மோகன் சிங்.



பகவான் பாபாவிடம் ஆசி பெற்ற பிரபல கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர்.



பகவான் பாபாவுடன் தொழிலதிபர் ரத்தன் டாடா.

## வாழ்க்கைக்கு ஏற்ற கல்வி; இதுவே பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் வழி

ஒரு மனிதனுக்கு நல்ல பண்புகளை போதித்து, சமூகத்தினருடன் இணக்கமான சூழ்நிலையில் வாழ, வழி வகுத்து கொடுப்பதே சிறந்த கல்வி. இந்த குறிக்கோளை அடைவதற்காக, உலகம் முழுவதும் உள்ள தலைசிறந்த கல்வி அறிஞர்களும், பல்கலைக் கழகங்களும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன. பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் கல்வித் திட்டமும் இதுதான்.

பகவான் ஸ்ரீ சத்ய சாய், கல்வித் திட்டத்தின் மூலம், மேலே கூறப்பட்ட குறிக்கோள்கள் எட்டப்பட்டுள்ளதுடன், அதைக் கடந்தும் சேவைகள் செய்யப்படுகின்றன. தற்போது உலகம் முழுவதும் தனி மனிதர்கள், மதங்களுக்கு இடையே சகிப்புத் தன்மை குறைந்து வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில், மாணவர்களுக்கு, அவர்களது வாழ்க்கைக்கு தேவையான விஷயங்களை போதிப்பதே கல்வியின் பணியாக இருக்க வேண்டும். உண்மை, நேர்மை, அமைதி, அன்பு, அகிம்சை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே, கல்வி

> **பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா கூறுகையில், 'ஒற்றுமை, சமத்துவம், தரம், சக மனிதர்களுடன் அமைதியாக வாழ்தல் ஆகியவை தான், உண்மையான கல்வி. இது, இதயத்தில் இருந்து வரக் கூடியது. 'எஜுகேர்'என, அழைக்கப் படும் இந்த கல்வி, உலக அறிவுடன் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும்' என்றார்.**




கடந்த 2009 ஆகஸ்டில், ஸ்ரீசாய் பல்கலைக் கழகம் நடத்திய, 'நீதி நெறிமுறைகள் மற்றும் உலக நிதி' மாநாட்டில் பங்கேற்ற ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் டாக்டர்.ஒய்.வி.ரெட்டி. ரிசர்வ் வங்கி கவர்னர் டாக்டர்.டி. சுப்பா ராவ்.



**எஸ்எஸ்எஸ் பல்கலை தேர்ச்சி சதவீதம்**

| | | |
|---|---|---|
| 2009 | - | 98% |
| 2008 | - | 95% |
| 2007 | - | 96% |
| 2006 | - | 96% |
| 2005 | - | 96% |



தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...

**பாலைவனத்தில் சோலை** 2
ஸ்ரீ சத்ய சாய் குடிநீர் திட்டம் கோடி இந்திய மக்களுக்கு குடிநீர் வழங்குகிறது. 5020 கி.மீ., நீள பைப் லைன் தரும் லைப் லைன்.

**ஸ்ரீ சத்ய சாய் ஹெல்த் கேர்** 3
மருத்துவ சேவை, வியாபாரம் ஆகி வரும் சூழ்நிலையில், பக்வான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் மருத்துவ மனைகள் எல்லாவற்றிற்கும், முன்னோடி. உலகத்தரமிக்க மருத்துவம், பரிவுடனும், அன்புடனும், பணச் செலவு ஏதும் இல்லாமலேயே!

**சேவையின் மூலம் நற்கதி** 4
தன்னலமற்ற சேவை மூலம் மனித சமுதாயத்தை, மேம்படுத்துதல் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை, ஸ்ரீ சாய் அமைப்புகளின் ஆதார நோக்கம்.

Gripper

# அன்பின் ஒளி

# சென்னை நகர குடிநீர் பிரச்னையை தீர்த்த பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபா

சென்னை நகருக்கு குடிநீர் வழங்கவும், ஆந்திராவின் வறட்சி மாவட்டங்களில் விவசாயத்தை பெருக்கும் வகையில் தெலுங்கு கங்கை திட்டம் தீட்டப்பட்டது. இதன்படி, கிருஷ்ணா நதி நீரை கால்வாய் மூலம் மாநிலத்தின் பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்ல ஆந்திர அரசு முடிவு செய்தது.

கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீசைலம் அணைக்கட்டின் ஒரு பகுதியில் உள்ள போத்திரெட்டுபாடு என்ற இடமும், கடப்பா அருகில் உள்ள சோமசீலா அணையும் பிரமாண்ட கால்வாய் மூலம் இணைக்கப்பட்டன.

ஆந்திர மாநிலத்துடன் தமிழக அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆண்டுக்கு 12 டி.எம்.சி., என்ற அளவில் கிருஷ்ணா நீர் பெற முடிவானது.

இதற்காக, சோமசீலா அணையில் இருந்து கண்டலேறு அணைக்கு வரும் கிருஷ்ணா நீரை, அங்கிருந்து 164 கி.மீ., துாரத்தில் உள்ள ஊத்துக்கோட்டையில் உள்ள 'ஜீரோ பாயின்ட்' வரை கால்வாய் அமைத்து கொண்டு வந்து, பின், 17 கி.மீ., தொலைவில் உள்ள பூண்டி ஏரிக்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது.

கண்டலேறு அணையில் இருந்து ஊத்துக்கோட்டை வரை அமைக்கப்பட்ட கால்வாயின் பல இடங்களில் மண் அரிப்பு ஏற்பட்டது. இதனால், கண்டலேறு அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட கிருஷ்ணா நீரில் பல லட்சம் லிட்டர் வீணானது.

கிருஷ்ணா நீர் வரும் கால்வாய் பராமரிக்கப்பட்டால் மட்டுமே சென்னைக்கு சீரான குடிநீர் பெற முடியும் என்ற நிலையில், பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபாவின் உதவியால், ஸ்ரீசத்ய சாய் அறக்கட்டளை மூலம் கால்வாய் சீரமைப்பு பணி துவக்கப்பட்டது. கண்டலேறு முதல் ஊத்துக்கோட்டை வரையிலான கால்வாயை 200 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கும் பணிகள் துவக்கப்பட்டன.

மண் அரிப்பு காரணமாக நீர் ஒழுக்கு ஏற்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டு, அங்கெல்லாம் கான்கிரீட் பக்கவாட்டு சுவர்களும், அடித்தளமும் அமைக்கப்பட்டது. பாறைகள் உள்ள பகுதிகள் மட்டும் விடப்பட்டன. ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய பிரமாண்டமான இப்பணி, இரண்டு ஆண்டுகளில் ஸ்ரீ சத்யசாய் அறக்கட்டளை செய்து முடித்தது. இதைத் தொடர்ந்து கடந்த 2006ம் ஆண்டு இறுதி முதல் புதுப்பிக்கப்பட்ட சத்யசாய் கால்வாய் மூலம் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது.

கால்வாய் புனரமைக்காததற்கு முன், கண்டலேறு அணையில் இருந்து திறந்துவிடப்படும் கிருஷ்ணா நீர் 10 நாட்கள் பயணம் செய்து ஊத்துக்கோட்டை 'ஜீரோ பாயின்ட்'டை வந்தடையும். மேலும், நீர் ஒழுக்கு காரணமாக ஆயிரம் கன அடி என்ற அளவில் திறந்துவிடப்படும் நீர், ஊத்துக்கோட்டைக்கு வரும் போது 450 முதல் 500 கன அடியாக குறைந்திருக்கும்.

ஆனால், சத்ய சாய் அறக்கட்டளை சார்பில் கால்வாய் புதுப்பிக்கப்பட்ட பின், திறந்துவிடப்பட்ட ஐந்து நாட்களில் கிருஷ்ணா நீர் ஊத்துக்கோட்டை வந்துவிடுகிறது. மேலும், ஆயிரம் கன அடி திறந்துவிடப்பட்டால், 900 கன அடி நீர் வந்து சேர்கிறது. பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் இந்த பிரமாண்ட திட்டத்தால், இன்றைக்கு சென்னை நகர மக்கள் தங்கு தடையின்றி குடிநீர் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணா நதி கால்வாய் புனரமைப்பு திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 'ஜீரோ பாயின்ட்'டான ஊத்துக்கோட்டையில் இருந்து பூண்டி ஏரி வரையிலான 17 கி.மீ., துார கால்வாயும் 100 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஊத்துக்கோட்டைக்கு வந்து சேரும் கிருஷ்ணா நீர், தங்கு தடையின்றி அடுத்த சில மணி நேரங்களில் பூண்டி ஏரி வந்தடைகிறது.

ஸ்ரீசத்யசாய் கால்வாயின் பயனாக, தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திர அரசு தரும் கிருஷ்ணா நீர் இன்றைக்கு சிந்தாமல், சிதறாமல் சென்னை வந்து சேர்கிறது.

சென்னை நகர மக்களின் குடிநீர் பிரச்னையும் முடிவுக்கு வந்துள்ளது.



ஸ்ரீசத்ய சாய் குடிநீர் திட்டம் மற்றும் இதர குடிதண்ணீர் திட்டங்கள்.









**ஸனாதன ஸாரதி** என்ற மாத இதழ் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டு பிரசாந்தி நிலையத்திலிருந்து அதிகார பூர்வமாக 52 வருடங்களாக இடைவிடாது வெளியாகிறது.




பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் அருளுரைகள், சொற்பொழிவுகள், சேவா செய்திகள் தாங்கி தற்போது 11 பிராந்திய மொழிகளில் வெளிவருகிறது.

எவ்வித விளம்பரமும் இன்றி சுயச் சார்புடன் தமிழில் இதை ஸ்ரீ சத்ய சாய் புக்ஸ் & பப்ளிகேஷன்ஸ் தமிழ்நாடு வெளியிட்டு வருகிறது. மிகக் குறைந்த சந்தாவாக வருடத்திற்கு ரூ.60/- மட்டும் பெறப்படுகிறது.

விவரங்களுக்கு **"சுந்தரம்"**, 7 சுந்தரம் சாலை, ராஜா அண்ணாமலைபுரம் சென்னை - 600 028.

## ஒரு கோடி மக்கள் பிரச்னையை தீர்த்த

### பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபாவின்

## குடிதண்ணீர் திட்டம்

இருபது ஆண்டுகளுக்கு முன், ஆந்திராவில் வறட்சியால் பாதித்த மாவட்டங்களில் உள்ள தொலைதுார கிராமங்களில், முக்கிய குடிநீர் ஆதாரமாக கிணறுகளே இருந்தன. அந்தக் கிணறுகளில் கிடைத்த தண்ணீரும் சுத்தமான குடிநீராக இல்லாதது மட்டுமின்றி, அதிக அளவில் புளோரைடு கலந்ததாக இருந்தது. இதனால், எலும்புகள் தொடர்பான பல குறைபாடுகள் மக்களை பாதித்தன.

ஆந்திராவின் கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் உள்ள குக்கிராமங்கள் பல, கோதாவரி நதி ஓடும் பகுதியில் இருந்து 15 கி.மீ., தொலைவில் இருந்தும் கடும் குடிநீர் பற்றாக்குறையைச் சந்தித்து வந்தன.



இதேபோல் தான் மேடக் மற்றும் மெகபூப் நகர் மாவட்டங்களில் உள்ள 320 கிராமங்களும் குடிநீர் பற்றாக்குறையைச் சந்தித்து வந்தன. இந்த மாவட்ட மக்களின், அதாவது ராயலசீமா பிராந்திய மக்களின் குடிநீர் பிரச்னையை தீர்க்கும் வகையில் தான் ஸ்ரீ சத்ய சாய் குடிதண்ணீர் திட்டம் துவக்கப் பட்டது.

ஸ்ரீ சத்யசாய் மத்திய அறக்கட்டளை, முதல்கட்டமாக அனந்தப்பூர் மாவட்டத்தில் 731 கிராமங்கள் பயனடையும் வகையிலான குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றியது. 18 மாதங்களில் ரூ.300 கோடி செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள பல நகரங்களும் இதனால், இப்போது பயனடைகின்றன.

அனந்தப்பூர் மாவட்ட குடி தண்ணீர் திட்டத்தை தொடர்ந்து, கோதாவரி, மேடக் மற்றும் மெகபூர் நகர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன்பின், சென்னைக்கு குடி தண்ணீர் தரும் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீ சத்ய சாய் மத்திய அறக்கட்டளை, நான்கு பெரிய குடி தண்ணீர் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. 5,020 கி.மீ., துாரத்திற்கு பைப் லைன்களை அமைத்துள்ளது. இது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள துாரமான 3,496 கி.மீட்டரை விட அதிகம்.

இதுமட்டுமின்றி, பல கிராமங்களில் பெரிய அளவில் டேங்குகள், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றையும் அமைத்துள்ளது. 1994 முதல் 2006ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட்ட இந்த குடி தண்ணீர் திட்டங்கள் மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சுத்தமான குடி தண்ணீரைப் பெற்று வருகின்றனர். இது காஷ்மீர் மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கு சமமானது.

சுத்தமான குடி தண்ணீர் கிடைக்கச் செய்வது ஆடம்பரமான விஷயமல்ல, தர்மமும் அல்ல. உலக சமூகத்திற்கு செய்யும் கடமை என, நினைத்து இந்த குடி தண்ணீர் திட்டங்களை ஸ்ரீ சத்யசாய் மத்திய அறக்கட்டளை நிறைவேற்றியுள்ளது.

# சிறப்பான மருத்துவ சேவையில் ஸ்ரீ சத்ய சாய் மருத்துவமனைகள்



பெங்களூரு ஒயிட்பீல்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் உயர் மருத்துவ அறிவியல் நிறுவனம்.



ஒயிட்பீல்டு மருத்துவமனையின் ஒரு பகுதி.

ஸ்ரீ சத்ய சாய் பாபாவுக்கு 20 வயது இருக்கும் போது, அவரின் தாயார் ஈஸ்வரம்மா, உள்ளூர் கிராம மக்களின் நிலைமை குறித்து மிகுந்த கவலை தெரிவித்தார். புறக்கணிக்கப்பட்ட, தொலை துார கிராமமான புட்டபர்த்தியில் வசிக்கும் மக்கள், ஏழைகளாக இருப்பதோடு, எளிதில் நோய் வாய்ப்படுகின்றனர் என்றும் கூறினார்.

"எப்போதும் மற்றவர்களுக்கு உதவு, யாரையும் ஒரு போதும் புண்படுத்தாதே' என்ற உறுதி மொழியை தொடர்ந்து பின்பற்றி வரும் ஸ்ரீ சாய்பாபா, 'தன்னலமின்றி, பிறர் நலனுக்காக வாழ வேண்டும்' என்ற தனது தாயாரின் அழைப்பையும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டார்.

கடந்த 1954ம் ஆண்டில், ஸ்ரீசத்ய சாய் பொது மருத்துவமனையை துவக்கினார். இப்படித் துவங்கிய சத்திய சாய் உடல் நல பராமரிப்பு முறையானது, இன்று பொது மருத்துவமனைகள், சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள், மொபைல் மருத்துவமனைகள், மருத்துவ முகாம்கள் என, பெரிய நெட்வொர்க்காக விரிவடைந்துள்ளது.

மதம், பொருளாதாரம் அல்லது சமூக பின்னணி என்ற பாகுபாடு காட்டப்படாமல் இந்த மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், பல நவீன வசதிகளும் இந்த மருத்துவமனைகளில் உள்ளன.

மருத்துவ ஆலோசனை, ஸ்கேன்கள், எக்ஸ்ரேக்கள், சிகிச்சை மற்றும் மருந்துகள் என, அனைத்துமே இந்த மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்படுகிறது. யாரும் சிகிச்சைக்காக பணம் செலுத்த வேண்டியதில்லை. சாய் மருத்துவமனைகளில் இறப்பு நிகழ்வது, உலக அளவில் மிகமிகக் குறைவே.

ஸ்ரீ சத்ய சாய் அமைப்பு மூலம் பல பொது மருத்துவமனைகள் நடத்தப்படுவதோடு, அவ்வப்போது மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன. 1990 நவம்பர் 23ம் தேதி, பகவான் சத்ய சாயியின் 65வது பிறந்த தினத்தன்று, நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று புட்டபர்த்தியில் ஒரு ஆண்டிற்குள் அமைக்கப்படும் என, அறிவித்தார். அவரின் வார்த்தையை உண்மையாக்கும் வகையில், ஸ்ரீ சத்ய சாய் இன்ஸ்டிடியூட் ஆப் ஹயர் மெடிக்கல் சயின்சஸ் என்ற எஸ்.எஸ்.எஸ். சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை 1991ம் ஆண்டு நவம்பர் 22ம் தேதி துவக்கப்பட்டது.



ஒயிட்பீல்டில் உள்ள ஸ்ரீ சத்யசாய் பொது மருத்துவமனை.

இதன்பின், பத்து ஆண்டுகள் கழித்து, 2001 ஜனவரியில் பெங்களூரில் உள்ள ஒயிட்பீல்டில், இதேபோன்ற மற்றொரு மருத்துவமனை துவக்கப்பட்டது. 'உண்மையான உடல் நல பராமரிப்புக்கு அன்பும், தன்னலமற்ற சேவையும் அவசியம்' என்ற செய்தியை வலியுறுத்தும் வகையில், இந்த மருத்துவமனை துவக்கப்பட்டது.

நவீன வசதிகள் மற்றும் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களுடன் கூடிய இரண்டு பொது மருத்துவமனைகள் புட்டபர்த்தி மற்றும் ஒயிட்பீல்டில் தொடர்ந்து செயல்பட்டு, தினமும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு மருத்துவ சேவைகள் அளித்து வருகின்றன. அத்துடன் மொபைல் வேன்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் மூலமும் கிராமப்பகுதி மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

சத்யசாய் உடல் நல பராமரிப்பு திட்டங்கள் மூலம் அளிக்கப்படும் சிறப்பான மருத்துவ சேவைகளால், சாய் மருத்துவமனைகளை எல்லாம் நோய் தீர்க்கும் கோவிலாக நோயாளிகளால் பார்க்கப்படுகின்றன. ஆந்திராவை சேர்ந்த சுனில் வர்மா என்ற மாணவர் ஒரு காலை இழக்கும் நிலையில் இருந்தார். எஸ்.எஸ்.எஸ். சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அவருக்கு

மேற்கொள்ளப் பட்ட ஆபரேஷனால், அவர் தற்போது நன்றாக நடக்கும் நிலையில் உள்ளார். 'நான் மீண்டும் நடப்பேன் என, நினைக்கவே இல்லை. ஆனால், இப்போது என் இரண்டு கால்களால் நடக்கிறேன்' என, வர்மா கூறியுள்ளார்.

வர்மாவின் தாயார் கூறுகையில், "என் மகனுக்கு சிகிச்சை அளித்த சாய் மருத்துவமனையில் நான் ஒரு பைசா கூட செலவிடவில்லை. நம்பிக்கை இழந்த எங்களுக்கும் தைரியம் கொடுத்ததோடு, என் மகனுக்கும் டாக்டர்கள் புது வாழ்வு அளித்துள்ளனர். அதற்கு சத்திய சாய்பாபாவும், அவரின் சிறப்பான சேவையுமே காரணம்," என, தெரிவித்துள்ளார்.

ஸ்ரீசத்ய சாய் உடல் நல பராமரிப்பு முறையானது இன்று, பல நாடுகளுக்கு சவால் விடும் வகையில் வளர்ந்துள்ளது. பொருளாதார ரீதியாக ஆதிக்கம் படைத்தவர்களால் கூட, அனைத்து மக்களுக்கும் இலவசமான மருத்துவ சேவைகளை வழங்குவது என்பது இயலாத காரியம். அதை சத்ய சாய் மருத்துவமனைகள் செய்து வருகின்றன. இந்த மருத்துவமனைகள் பல பிரிவினரைக் கொண்ட இந்த பன்முக சமுதாயத்தில், ஒரு மாதிரி மருத்துவமனைகளாக செயல்பட்டு வருகின்றன.

**2009ம் ஆண்டு வரை அளிக்கப்பட்ட சிகிச்சைகள்**

| | |
|---|---|
| இதய அறுவை சிகிச்சைகள் | 97,771 |
| சிறுநீர் உறுப்பு அறுவை சிகிச்சைகள் | 44,233 |
| கண் அறுவை சிகிச்சைகள் | 41,537 |
| நரம்பியல் அறுவை சிகிச்சைகள் | 1,60,877 |
| எலும்பு அறுவை சிகிச்சைகள் | 4,569 |
| பிளாஸ்டிக் சர்ஜரிகள் | 4,025 |
| குடல் நோய் அறுவை சிகிச்சைகள் | 2,357 |
| புறநோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள் | 26,56,375 பேர் |






ஆந்திரா புட்டபர்த்தி, பிரசாந்தி கிராமத்தில் உள்ள ஸ்ரீசத்ய சாய் உயர் மருத்துவ அறிவியல் நிறுவனம்.










புட்டபர்த்தி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நுழைவுப் பகுதி.

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவால் நடத்தப்படும் பல்வேறு மருத்துவமனைகளில் உள்ள சேவைகள்.

# வெள்ளத்தில் மூழ்கிய கிராமங்கள் மீண்ட அதிசயம்

இப்போது அவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். அவர்களின் கன்னங்களில் கண்ணீர் காய்ந்து, முகங்களில் புன்னகை தவழ்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் சந்தித்தது பெரும் சோகம்...

ஆம்... 2008 செப்டம்பர் 18... மழைக் காலம். அன்று இரவு, நாம் நம் படுக்கையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தபோது, ஒரிசாவில் மகாநதி, தன் பெயருக் கேற்றாற் போல், பெரிய நதியாக, வெள்ளச் சீற்றத்துடன் பல கிராமங்களுக்குள் பாய்ந்தது.

ஒரிசாவுக்கு வெள்ளம் ஒன்றும் புதிதல்ல தான். ஆனால், அன்றைய வெள்ளம் பல ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது. ஒரிசாவில் 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பியுள்ளனர். இந்த வெள்ளம், நான்கு லட்சம் எக்டேர் விளைநிலங்களின் விளைச் சலைப் பாழாக்கியது.

தொடர்ந்த மழையால் மகாநதி பெருக்கெடுத்து, இரண்டாயிரத்து 500 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. ஐந்து நாட்கள் பெய்த பேய்மழையால், 25 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். 50 பேர் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தனர்.

இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டதாக மாநில அரசு அறிவித்தது. பி.பி.சி., செய்தியில், '50 ஆண்டுகளில் மிக மோசமான வெள்ளம்' என, குறிப்பிடப் பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய விமானப் படையினர் ஹெலிகாப்டர்களிலிருந்து உணவுப் பொட்டலங்களை போட்டனர். ஆனால், அவற்றில் பல வெள்ளத்தில் போய் விட்டன. மிகச் சிலருக்கே பொட்டலங்கள் கிடைத்தன. மீட்புப் பணிகளோ, வெள்ளப் பாதிப்பின் வீச்சுக்கு ஏற்றபடி அமையாமல், மந்தமாக நடந்தன.

**சத்யசாய் மத்திய அறக்கட்டளையின் இளைஞர் படை:**

வெள்ளம் சூழ்ந்த சில மணிநேரங்களிலேயே, ஒரிசா ஸ்ரீ சத்யசாய் சேவா அமைப்பின் இளைஞர் பிரிவிலிருந்து 300 பேர் கொண்ட இளைஞர் படை, உணவு, மருந்துப் பொருட்கள், உடைகள், தற்காலிகக் கூடாரங்கள் இவற்றோடு நம்பிக்கையையும் சேர்த்து எடுத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்தனர்.

'வெள்ளம் ஏற்பட்டது என்ற செய்தியைக் கேட்ட போது, நாங்கள் புவனேஸ்வரில் முக்கியமான ஒரு கூட்டத்தில் இருந்தோம். உடனடியாக உணவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பொட்டலங்களாகக் கட்டி, எங்கள் மோட்டார் பைக்குகளில் கொண்டு சென்றோம்.

ஒவ்வொரு இடத்திலும் தண்ணீர் ஏழடி உயரத்துக்குப் பெருகியிருந்தது. இருந்தாலும் எங்கள் இளைஞர் படையினர் அந்த வெள்ளத்திலும் நீந்திச் சென்று உணவுப் பொட்டலங்களைக் கொடுத்தனர்' என்று நினைவு கூர்கிறார், ஒரிசாவிலுள்ள சாய் அமைப்பின், இளைஞர் பிரிவின் இணை ஒருங்கிணைப்பாளர் நாராயண் சர்.

**சத்யசாய் சேவா அமைப்பின் நிவாரணப் பணி:**

வெள்ள நிவாரணப் பணியில் அறக்கட்டளைத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது. இந்தியா முழுவதும் உள்ள சத்யசாய் அமைப்புகளின் சார்பில், முதல் நிதியாக ஒரு கோடியே 50 லட்ச ரூபாய் அளிக்கப் பட்டது.



ஒரிசாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீ சத்ய சாய் அமைப்பின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்.






ஒரிசாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, முதலில் கட்டப்பட்ட தற்காலிக குடிசைகள்.



ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கிடம் இருந்து நினைவு பரிசு பெறும் ஸ்ரீ சத்ய சாய் அறக்கட்டளையின் செயலர் சக்கரவர்த்தி.

ஒரிசாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணி மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை தாமே ஏற்று நடத்தப் போவதாக புட்டபர்த்தியில் பாபா அறிவித்தார். வீடுகளை இழந்த கிராம மக்களுக்காக வீடுகளைக் கட்டித் தருவதற்காக 10 கோடிரூபாய் நிதி ஒதுக்கப்படுவதாகவும் கூறினார்.

கடந்த 2008, அக்டோபர் 7 ம் தேதி, பாபாவின் வழிகாட்டுதலின் படி, இந்திய சத்ய சாய் சேவா அமைப்பின் தலைவர் வி.ஸ்ரீநிவாசன், 'இந்த வீடுகள் உறுதியான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும். இவற்றோடு, பள்ளிகள் உள்ளிட்ட பிற வசதிகளும் செய்து தரப்படும்' என்று அறிவித்தார்.

'எல்லாவற்றையும் நாங்கள் இழந்து நின்ற போது, சிலர் எங்களுக்கு வந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொடுத்தனர். நீங்கள் யார் என்று கேட்ட போது, 'சாய்பாபா எங்களை அனுப்பி வைத்துள்ளார்' என்றனர்.

அப்போது தான் நாங்கள் முதன்முதலாக பாபாவின் பெயரைக் கேள்விப்பட்டோம் ' என்கிறார் கேந்திரபாடா மாவட்டத்தில் வசிக்கும் ஒரு விவசாயியின் மனைவி தாரா ஜெனா.

மேலும் அவர், 'அடுத்த நாள் அவர்கள், எங்களுக்கு வீடு கிடைக்கப் போவதாகக் கூறினர். எங்களைப் போன்ற துரதிருஷ்டவாசிகளுக்கு அதுபோன்ற உதவிகளைக் கடவுள்தான் செய்ய முடியும்' என்கிறார்.

அதே மாவட்டத்தின் பெந்தோ என்ற கிராமத்தைச் சேர்ந்தவரும், நான்கு குழந்தைகளுக்குத் தாயும் ஆன சஞ்சிதா பெகெரா (45) கூறுகையில், 'இதுவரை நாங்கள் ஓலைகளால் வேயப்பட்ட தற்காலிகக் குடிசைகளில் தான் வாழ்ந்தோம். இது போன்ற கான்கிரீட் வீடுகளைக் கட்டுவது என்பது நாங்கள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று' என்று வியக்கிறார்.

கட்டாக் மாவட்டத்தின் மணிபத் கிராமத்தில் வசிப்பவரான புஷ்பலதா பெகெரா, 'நாங்கள் வெள்ளம் பாதித்த அந்த நாட்களில் இறந்தே போனோம் என்று சொல்லலாம். பாபா எங்களுக்கு மறுபிறவி அளித்துள்ளார்.

எங்களைக் காக்கும் கடவுள் இப்போது எங்களுக்கு வீடும் கொடுத்திருக்கிறார். சொல்லப்போனால், சாய்பாபாவின் பக்தர்கள் இந்தக் கிராமத்தில் அடியெடுத்து வைத்த அன்றிலிருந்து என் வாழ்க்கை மாறிப் போனது' என்று மனம் உருகுகிறார்.

## சத்யசாய் சேவா அமைப்பின் சார்பில் வீடுகள் கட்டும் திட்டம்

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, ஒரிசாவில் பல கிராம மக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களைக் குறைந்த விலையில் சேவா அமைப்புக்கு விற்க முன்வந்தனர். பாதிப்பின் அடிப்படையில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2009, மார்ச்சில், சேவா அமைப்பின் சார்பில், 699 வீடுகள் கட்டும் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப் பட்டது. வீடுகளோடு பள்ளிகள், சுகாதார மையங்களும் கட்டப்பட்டன. அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், இனி வரும் வெள்ளத்தையும் தாங்கும் விதத்தில் வீடுகள் கட்டப்பட்டன.

**ஒரிசாவின் கேந்திரபாதா மாவட்டத்தில்**

**199** வீடுகள் | **1** பள்ளி

**கட்டாக் மாவட்டத்தில்**

**275** வீடுகள்

**புரி மாவட்டத்தில்**

**225** வீடுகள் | **1** பள்ளி

**அதைத் தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில், புட்டபர்த்தியில் பயனாளிகளுக்கு வீடுகளின் சாவிகளை பாபா அளித்தார். இப்போது ஒரிசாவின் 16 கிராமங்கள், ஸ்ரீசத்யசாய் கிராம ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**'பிற தொண்டு நிறுவனங்கள் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பே, சத்யசாய் அமைப்பு, முதல் ஆளாக முன்வந்து மீட்புப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. குறிப்பிட்ட காலத்துக்குள் 699 வீடுகளும் தரமாகக் கட்டித் தரப்பட்டுள்ளன' என்கிறார்.**

ஒரிசாவின் தற்போதைய தேர்தல் கமிஷனரும் அப்போதைய தலைமைச் செயலருமான
**அஜித் குமார் திரிபாதி**

# அன்பின் ஒளி









பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற, ஸ்ரீ சத்யசாய் பல்கலைக் கழகத்தின் வருடாந்திர விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று சாகசங்கள் செய்த மாணவர்கள்.

## வாழ்க்கைக்கு ஏற்ற கல்வி; இதுவே பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் வழி

1ம் பக்கம் தொடர்ச்சி

போதிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான கருத்து.

பண்புசார்ந்த இந்த கல்வியை, உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தும் வகையில் தான், பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் கல்விச் சேவை நடந்து வருகிறது. இங்கு ஆரம்ப கல்வியில் இருந்து, ஆராய்ச்சி படிப்பு வரை, பண்புசார்ந்த கல்வியை அடிப்படையாக கொண்டு தான், போதிக்கப்படுகின்றன.

பெண்களுக்காக, 1968ல் அனந்தபூரில் ஒரு கல்லூரியை, பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா துவக்கினார். அன்றில் இருந்து கடந்தாண்டு வரை, 22 ஆயிரம் பெண்கள், அந்த கல்லூரி மூலம், பண்புசார்ந்த கல்வியை பெற்றுள்ளனர்.

இதற்கு பின், ஆண்களுக்காக பெங்களூரு, பிரசாந்தி நிலையம் ஆகிய இடங்களில் கல்லூரிகள் துவக்கப்பட்டன. 1981ல் இந்த மூன்று கல்லூரிகளும், பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா நிகர்நிலை பல்கலையுடன் இணைக்கப்பட்டன. 2007ல் இது, பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப்பட்டது.

'ஒழுக்கம் தான், கல்வியின் ஒட்டு மொத்த குறிக்கோள்' என்பது தான், பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் கல்வி மையங்களின் தாரக மந்திரம். வாழ்க்கை சார்ந்த அனைத்து விஷயங்களையும் கற்றுத் தெரிந்து கொண்டு, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குழந்தையிடமும் ஒரு தனித் திறன் ஒளிந்திருக்கும். அந்த திறனை வெளிக் கொண்டு வருவதாக கல்வி முறை அமைய வேண்டும். படித்து முடிந்தவுடன், நோக்கம் நிறைவேறி விட்டது என கருதாமல், அதையும் தாண்டி கல்விச் சேவை தொடர வேண்டும். பகவான் ஸ்ரீ சத்ய சாயின் கல்வி மையங்கள், இதைத் தான் செய்து வருகின்றன.

இந்த கல்வி மையங்கள் மூலம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சமூக சேவை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கிராமங்களுக்கு சென்று, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவது, உணவு, உடை வழங்குவது ஆகியவை, இந்த திட்டத்தின் சிறப்பம்சம்.

இதுபோன்ற திட்டங்கள் மூலம், கல்வி முடிந்த பின்னும், வெளியே சென்று, மக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மை மாணவர்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

பகவான் ஸ்ரீ சத்ய சாய் கல்வி நிறுவனங்களில் ஏற்கனவே படித்த மாணவர்கள், தற்போதும் சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்களுக்கு, சேவை செய்து வருகின்றனர்.

சேவையுடன் ஒருங்கிணைந்த கல்வியை பெறுவதன் மூலம், ஒவ்வொரு மாணவருக்குள்ளும் வாழ்க்கை பிரச்னையை எதிர்கொள்ளும் சாதகமான மன நிலை ஏற்படுகிறது.

இதனால் தான் சத்ய சாய் கல்வி நிறுவனங்களில் படித்த மாணவர்களை வேலைக்கு சேர்ப்பதற்கு, பல பிரபலமான வர்த்தக நிறுவனங்கள் வரிசையில் நிற்கின்றன.

பிரசாந்தி நிலையத்தில் முதல் வகுப்பில் இருந்து பிளஸ் 2 வரை, மாணவர்களுக்கு இலவசமாக சி.பி.எஸ்.இ., கல்வி கற்றுத் தரப்படுகிறது. இந்த பள்ளிகளில் மிகச் சிறந்த முறையில் கல்வி கற்றுத் தரப்படுவதுடன், மாணவர்களின் ஒழுக்கம் உட்பட அனைத்து பண்புகளும் மேம்படுத்தப்படுகிறது.

இதைத் தவிர, ஸ்ரீ சத்ய சாய் மாணவர் அணி ஒன்றும் கல்விச் சேவை செய்து வருகிறது. இந்த மாணவர் அணி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், ஏழை மாணவர்களுக்காக வார இறுதியில் சிறப்பு வகுப்புகளை எடுத்து வருகிறது.

'அனைத்து விதமான நம்பிக்கைகளுக்கும் மரியாதை தர வேண்டும். மூத்தவர்களுக்கும், இயற்கைக்கும் மரியாதை தர வேண்டும்' என்பது உள்ளிட்ட சிறந்த பண்புகளை குழந்தைகளுக்கு கற்றுத் தரும் வகையில் பால விகாஷ் கல்வி, கற்றுத் தரப்படுகிறது.

சாய் அமைப்புகள் மூலம், மாணவர்களுக்கு உயர்ந்த தன்நம்பிக்கை ஏற்படுத்தப்படுகிறது. இந்தியாவில் மட்டும் 99 சத்ய சாய் பள்ளிகள் உள்ளன. வெளிநாடுகளில் 41 பள்ளிகள் இயங்கி வருகின்றன.


இவற்றில் பெரும்பாலான பள்ளிகளில் இலவசமாகவே கல்வி கற்றுத் தரப்படுகிறது. மற்ற பள்ளிகளில் மிக குறைந்த கட்டணங்களில் கல்வி கற்றுத் தரப்படுகிறது.

## 'மனிதனுக்கு செய்யும் சேவை; கடவுளுக்கு செய்யும் தொண்டு'

1ம் பக்கம் தொடர்ச்சி

சத்ய சாய் பாபாவின் 'பிரசாந்தி நிலையம்' ஆசிரமத்தில், பக்தர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் நிறைந்துள்ளன.

சத்ய சாய் பாபாவின் தத்துவங்கள், இனம், மதம் அல்லது இடம் ஆகிய அனைத்தையும் கடந்து நிற்கிறது. தன்னலமற்ற சேவை மூலமான சத்ய சாய் பாபாவின் அன்பினால், உலகளவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள், சத்ய சாய் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளனர்.



இவரது வாழ்க்கை மற்றும் சிந்தனை ஆகியவை மிகவும் ஆற்றல் வாய்ந்தது. இவரது எல்லை கடந்த அன்பு, சர்வதேச அளவிலான அணுகுமுறை மற்றும் இவர் நிகழ்த்திய பல அதிசயங்கள் ஆகியவை, உண்மையில் இவர் யார்? என்ற கேள்வியை பலரும் எழுப்ப காரணமாகியது.

இதற்கு பகவான் சத்ய சாய் பாபா அளித்த பதில்:

நானும் கடவுள் நீங்களும் கடவுள். உங்களுக்கும் எனக்கும் உள்ள ஒரே வேறுபாடு, நான் அதை உணர்ந்திருக்கிறேன்; நீங்கள் அதை உணரவில்லை என்பது தான். நான் யாருடைய நம்பிக்கையையும் அழிக்க வரவில்லை.

அவரவர் நம்பிக்கையில், அவரவர் உறுதியாக இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு கிறிஸ்துவன் சிறந்த கிறிஸ்துவனாகவும், முஸ்லிம் சிறந்த முஸ்லிமாகவும், இந்து சிறந்த இந்துவாகவும் திகழ முடியும்.

பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு உயிரினுள் இருக்கும் ஆன்மாவிலும், கடவுளின் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்பதை அவர்களை உணர வைத்து, கடவுளை சென்றடையும் வழியின் மூலம் அவர்களை சகோதரத்துவம் என்ற பிணைப்பின் கீழ், ஒரே குடும்பமாக இணைப்பதே என் குறிக்கோள். அதற்காக நான் வருகை தந்துள்ளேன்.

உண்மை, நேர்மை, அமைதி, அன்பு மற்றும் அகிம்சை ஆகிய ஐந்தும், அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான வழி. கடவுளிடம் அன்பு செலுத்துதல், தவறு செய்ய அஞ்சுதல் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.

'எனது வாழ்க்கை எனது செய்தி', தன்னலமற்ற சேவை மூலம் பாவங்களில் இருந்து விடுபெற முடியும். மனிதனுக்கு செய்யும் சேவை; கடவுளுக்கு செய்யும் தொண்டு.

இதுவே பகவான் சத்ய சாய் பாபாவின் செய்தி.

உலகின் பல்வேறு நாடுகளிலும், அப்பகுதியில் உள்ள மக்கள் நலனுக்காக, சாய் அமைப்பு பல்வேறு சேவைகளை செய்து வருகிறது.

பொறாமை, லஞ்ச ஊழல், வன்முறை மற்றும் பயங்கரவாதம் போன்றவை பெருகி உள்ள தற்போதைய சூழ்நிலையில், பலரும் பகவான் சத்ய சாய் பாபாவை தங்கள் முன்னுதாரணமாக பார்க்கின்றனர்.

## அனைவரிடமும் அன்பு காட்டு, எல்லாருக்கும் சேவை செய்: பாபா

**'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவர் சாய்பாபா. 'நீ சேவை செய்வது மற்றவர்களுக்கல்ல. உனக்கே தான் செய்து கொள்கிறாய். ஏனென்றால் ஆத்மா உன்னிடத்திலும் உள்ளது; மற்றவரிடத்திலும் உள்ளது' என்பார் பாபா. 'நீ சேவை செய்வது பெரிய காரியமல்ல. என்ன சேவை செய்கிறாய் என்பது தான் முக்கியம்' என்ற பகவான் சாய்பாபாவின் இந்த கருத்தில் உருவானது தான் சத்ய சாய் சேவா அமைப்பு. இந்த அமைப்பு எந்த மதத்தையும் சார்ந்ததல்ல. இது ஒரு ஆன்மிக அமைப்பு.**

க டந்த 1967ம் ஆண்டு பகவான் பாபாவால் ஏற்படுத்தப்பட்ட இந்த சேவை அமைப்பு ஆன்மிகம், சுகாதாரம், கல்வி ஆகிய முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நம் நாட்டில் 23 மாநிலங்களிலும், 185 நாடுகளிலும் சத்ய சாய் சேவை அமைப்பு தனது சீரிய தொண்டை ஆற்றி வருகிறது.

நம்நாட்டில் 2,500 சாய் சமிதிகளும், 5,700 பஜனை மண்டலிகளும், 16 ஆயிரம் பால விகாஸ் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஒரு லட்சத்து 30 ஆயிரம் சாய் தொண்டர்களும், 75 ஆயிரம் இளைஞர்களும் எந்த வித பலனையும் எதிர்பார்க்காமல் தொண்டாற்றி வருகின்றனர்.

கிராமப்புற சேவையாற்றுவதில் ஆறு லட்சம் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். தொண்டர்களில் அமைச்சர்கள், கலெக்டர்கள், நீதிபதிகள், வங்கி அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள், விவசாயிகள், டாக்டர்கள் என பலதரப்பட்டவர்கள் உள்ளனர்.

சத்ய சாய் நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகளில் மக்களிடமிருந்து எந்த கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

ஆன்மிக சேவை மையங்கள் சொற்பொழிவு, பஜனைபோன்றவற்றின் மூலம் பகவான் சத்திய சாய்பாபாவின் போதனைகளை பரப்பி வருகின்றன.

கல்வி சேவை அமைப்புகள் பால விகாஸ் திட்டத்தின் கீழ் 5 முதல் 13 வயது வரையுள்ள சிறார்களுக்கு இந்திய கலாசாரம், ஒழுக்கம், சத்தியம், தர்மம், அகிம்சை போன்றவற்றை போதித்து வருகின்றன. இந்த திட்டத்தின் கீழ் மூன்றரை லட்சம் குழந்தைகள் பலனடைந்து வருகின்றனர்.

இயற்கை சீற்றங்களின் போது சாய் சேவாதள தொண்டர்கள் விரைந்து சென்று பல்வேறு நலப்பணிகளை ஆற்றியுள்ளனர்.

குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்ட போதும், ஒரிசா, கர்நாடக, ஆந்திராவில் வெள்ளம் சூழ்ந்த போதும், தமிழக கடற்கரையோரங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட போதும் சத்ய சாய் சேவாதள தொண்டர்கள் மகத்தான பணியாற்றினர்.











இதே போல கும்பமேளா போன்ற பெருவிழாக்களின் போது துப்புரவு மற்றும் அன்னதான பணிகளில் இந்த அமைப்பு சேவையாற்றி வருகிறது.

சத்ய சாய் சேவா அமைப்பின் முக்கிய பணிகளில் ஒன்று கிராம ஒருங்கிணைப்பு திட்டம். நாடு முழுவதும் 2,100 கிராமங் களில் இந்த அமைப்பு சேவையாற்றி வருகிறது. மருத்துவம், கல்வி, விவசாயம், சுகாதாரம், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருவது போன்ற பணிகளை இந்த அமைப்பு செய்து வருகிறது.

இந்த சேவை அமைப்பில் தொழில் நுட்ப பிரிவும் இயங்கி வருகிறது. தண்ணீரை தூய்மைப்படுத்துதல், குறைந்த செலவில் கழிவறைகளை கட்டுதல், சூரிய சக்தி மூலம் மின்சாரம் அளிப்பது போன்ற பணிகளை இந்த பிரிவு செய்து வருகிறது.

பாபாவின் பணிகள் பற்றி இவர்கள்

## சொல்லியது என்ன?



வறுமைக்கு எதிராக ஆயுதமற்ற போராட்டத்தைத் துவக்கியிருக்கிறார் பகவான் பாபா. அவரது போராட்டம் வறுமைக்கு எதிராக எப்படி வேலை செய்கிறது? நீர் (வசதித் திட்டங்கள்), கல்வி மற்றும் நலவாழ்வு இவை மூலம் அந்தப் போராட்டம் நடக்கிறது.

**முன்னாள் ஜனாதிபதி**
**அப்துல் கலாம்.**



சாயியின் மாணவர்கள், எளிமை மற்றும் அடக்கத்துடன் இருக்கின்றனர். இவர்களின் இந்தக் குணங்கள்தான் உண்மையில் பற்றின்மையின் அடையாளமாக உள்ளன. பற்றின்மை உடையவர்கள் உழைக்காமல் இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள்தான் கடுமையாக உழைக்க வேண்டும். அதற்கான பயிற்சியை சுவாமி (பாபா) தந்திருக்கிறார்.

**வேணு ஸ்ரீநிவாசன்,**
**டி.வி.எஸ்., மோட்டார்ஸ் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்**



ஸ்ரீ சத்யசாய் இன்ஸ்டிடியூட்கள், இளம் வயதிலேயே மிகப் பொருத்தமாக ஒழுக்க அடிப்படையிலான கல்வியைக் கொடுக்கின்றன. பாபாவால் தெளிவாகச் சொல்லப்பட்ட அந்த ஒழுக்கப் பண்புகளை உள்வாங்கிக் கொண்ட இந்நிறுவனங்களின் ஆசிரியர்கள், தாங்கள் கல்வி கற்பிக்கும் முறை மூலம் அவற்றை மாணவர்களிடம் செலுத்தி அவர்களுக்கு வழி காட்டுகின்றனர். இவைதான் வளர்ச்சி பெற்ற இந்தியாவுக்கு நல்ல படிப்பினைகள்.

**ஐ.சி.ஐ.சி.ஐ., வங்கியின்**
**கே.வி.காமத்.**



பக்தியையும், கருணையுடன் கூடிய அன்பையும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருப்பதை நான் உணர்ந்து நெகிழ்ந்தேன். எளிமை, அடக்கம் என்ற வடிவில் சத்யசாய்பாபா இவர்கள் அனைவரிடமும் ஊடுருவி இருக்கிறார்.

**உஷா நாராயணன்,**
**எஸ்.இ.பி.ஐ., செயல் இயக்குனர்.**



இன்றைய பொருளாதார நோக்கிலான உலகில், நாம் என்ன படித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை, ஸ்ரீசத்யசாய் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் ஒழுக்க அடிப்படையிலான கல்வி நமக்குக் காட்டுகிறது. சத்யசாய் மாணவர் களுக்கு இந்த ஒழுக்கக் கல்வி, மிகப்பெரிய செல்வங்களுள் ஒன்று.

**ஏ.பாலசுப்ரமணியன்,**
**பிர்லா சன் லைப் மியூச்சுவல் பண்ட் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி**